# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மாதாந்த மதிப்பீடு

| தரம் - 10 | வணிகக்கல்வியும், கணக்கீடும் | யூலை – 2022 |
|---|---|---|

## பகுதி1

01) மனித தேவைகள் தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எது சரியானது.
(1) அனைத்து சமூகங்களிற்கும் பொதுவானவை
(2) இரண்டாம் கட்டமானது
(3) பல்வகையானவை
(4) வரையறுக்கப்படாதவை

02) மனித தேவை விருப்பங்களை நிறைவுசெய்யக்கூடிய தொட்டுணரமுடியாத, பௌதீகத்தன்மை அற்றவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சேவை உற்பத்தி நிறுவனம் (2) பொருள் உற்பத்தி நிறுவனம்
(3) சந்தைப்படுத்தல் நிறுவனம் (4) காப்புறுதி நிறுவனம்

03) ‘அ’ பகுதியில் தேவைகள் சிலவும் ‘ஆ’ பகுதியில் விருப்பங்கள் சிலவும் தரப்பட்டுள்ளது.

| அ | ஆ |
|---|---|
| 1. உணவு | A. மாடி வீடு |
| 2. உடை | B. பாண் |
| 3. வீடு | C. தொலைபேசி |
| 4. தொடர்பாடல் | D. தொப்பி |

‘அ’ பகுதியில் உள்ளவற்றில் இருந்து ‘ஆ’ பகுதியில் பொருத்தமானதை தெரிவு செய்க.
(1) A, D, C, B (2) B, D, C, A
(3) B, D, A, C (4) B, C, A, B

04) பின்வருவனவற்றில் உடல் உழைப்பை வழங்குவோர்.
1) கணக்காளர் 2) முகாமையாளர் 3) சுத்திகரிப்புத் தொழிலாளி 4) வைத்தியர்

05) உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக் காரணிகளை ஒழுங்கமைத்து யாதேனும் உற்பத்திச் செயன்முறையொன்றை ஆரம்பித்து நடாத்திச்செல்லும் கருமம் எது?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

06)பாடசாலை ஒன்றில் உடல் உழைப்பை வழங்குபவர்
(1) ஆசிரியர் (2) அதிபர் (3) சுகாதாரத் தொழிலாளி (4) எழுதுவினைஞர்

07) **கருங்கற்களை** உடைத்து விநியோகம் செய்யும் வணிகம் ஒன்றில் ஈடுபடும் **உரிமையாளரொருவர்** மிகச் சிறந்த **இயந்திரமொன்றை** வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து அதனை இயக்குவதற்காக சிறந்த **ஊழியர்கள்** இருவரை நியமித்தார். இங்கு கோடிடப்பட்டவைகளுக்கு பொருத்தமான உற்பத்திக் காரணிகள் முறையே
(1) நிலம், முயற்சி, மூலதனம், உழைப்பு (2) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி
(3) முயற்சி, நிலம், மூலதனம், உழைப்பு (4) மூலதனம், உழைப்பு, நிலம், முயற்சி

08) யாதேனும் வணிகம் ஒன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருளுக்குச் சமமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துபவர்கள்
(1) ஊழியர்கள் (2) வழங்குனர்கள் (3) போட்டியாளர்கள் (4) வாடிக்கையாளர்கள்


kalvi.lk

09) ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் தையல் இயந்திரங்கள் குறித்து நிற்கும் உற்பத்திக் காரணியாக அமைவது,
(1) முயற்சி (2) நிலம் (3) மூலதனம் (4) உழைப்பு

10) பின்வரும் வணிக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அக்கறையுடைய தரப்பினர் அடைந்து கொள்வதற்கான சில இலக்குகள் ஆகும்.

A. நியாயமான சம்பளத்தை பெறுதல்
B. தேசிய உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளல்
C. தமது உற்பத்திப் பொருட்களது விலைகளைத் தீர்மானித்தல்

மேலே தரப்பட்ட A,B,C ஆகிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அக்கறை செலுத்தும் தரப்பினரைச் சரியான ஒழுங்கு வரிசையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) A. போட்டியாளர் B. ஊழியர் C. உரிமையாளர்
(2) A. ஊழியர் B. உரிமையாளர் C. வாடிக்கையாளர்
(3) A. முகாமையாளர் B. ஊழியர் C. உரிமையாளர்
(4) A. ஊழியர் B. அரசு C. போட்டியாளர்

11) வணிகச் சூழல் வகைகள் சில கீழே தரப்படுகின்றன

A- உரிமையாளர்
B- பொருளாதாரச் சூழல்
C- பூகோளச் சூழல்
D- ஊழியர்
E- வாடிக்கையாளர்
F- முகாமையாளர்

மேற்குறிப்பிட்டவற்றுள் அகச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடைத் தொகுதியாக அமைவது,
(1) A,B,D (2) A,D,F (3) B,D,F (4) C,E,F

12) பின்வருவனவற்றுள் உள்நாட்டு வணிகத்தில் ஏற்படும் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகளாவன,
(1) பயிற்சிபெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்படுதல்.
(2) உள்நாட்டுக் கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல்.
(3) நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளமுடிதல்.
(4) அதிக போட்டித்தன்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.

13) பின்வருவனவற்றில் வணிகமொன்றின் அச்சுறுத்தலாக அமைவது.
(1) புதிய உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்துதல்.
(2) வணிகத்தின் பொருத்தமற்ற புவியியல் இடஅமைவு.
(3) சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்தல்
(4) அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன்முறைகளை அறிமுகப்படுத்துதல்.

14) நாடொன்றின் பொருளாதார விருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுக்கும் நிறுவனம்
(1) வணிக வங்கி 2) காப்புறுதி நிறுவனம் 3) அரசாங்கம் 4) நிதி நிறுவனங்கள்

15) பின்வருவனவற்றுள் பொருளாதாரச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் தொகுதி
(1) சட்டங்கள், வரிக்கொள்கைகள், சனத்தொகை அளவு
(2) ஆயுட்காலம், சேமிப்பு, உட்கட்டமைப்பு வசதி
(3) பணவீக்கம், ,வரவு செலவுத்திட்ட கொள்கை, சேமிப்பு
(4) நிறைதொழில் மட்டம், வட்டி வீதங்கள், வருமானப் பரம்பல்

16)வணிகங்கள் தமது வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் அறிந்து கொள்வதற்கு
(1) அகச்சூழலை ஆராய்தல் வேண்டும் . (2) புறச்சூழலை ஆராய்தல் வேண்டும்.
(3) பூகோளச்சூழலை ஆராய்தல் வேண்டும். (4) வணிகச் சூழலை ஆராய்தல் வேண்டும்.

17)அண்மையில் வணிகவங்கிகளால் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி வீதமானது குறைக்கப்படுதல் வணிகங்களுக்கு
(1) ஒரு வாய்ப்பாகும். (2) ஒரு பலமாகும்.
(3) ஒரு அச்சுறுத்தலாகும். (4) ஒரு பலவீனமாகும்.



kalvi.lk

18) வணிக உலகில் உற்பத்தி செய்யப்படும் சில பொருட்கள் சேவைகள் மிக விரைவாக காலாவதியாகும் நிலைக்கு உட்படுவதற்கு காரணமான சூழல்
(1) பூகோளச்சூழல். (2) அரசியல் சூழல். (3) தொழில்நுட்பச்சூழல். (4) சட்டச்சூழல்.

19) பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனம்
(1) இலங்கை வங்கி (2) இலங்கை மத்திய வங்கி
(3) வணிக வங்கி (4) சேமிப்பு வங்கி

20) வணிகமொன்றின் பேரினச் சூழல் காரணிகளில் உள்ளடங்காத சூழல் காரணிகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) வாடிக்கையாளர், வழங்குநர், அரசியல் சூழல்
(2) உரிமையாளர், முகாமையாளர்கள், ஊழியர்கள்
(3) அரசியல் சூழல், சட்டச் சூழல், பொருளாதாரச் சூழல்
(4) பொருளாதாரச் சூழல், தொழில்நுட்பச் சூழல், பூகோளமயச் சூழல்

(20×2= 40 புள்ளிகள்)

# பகுதி 11

01) அ. வணிகம் எனும் எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக.
ஆ. வணிகத்தின் பிரதான நோக்கங்கள் 2 தருக.

02) அ. தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக
ஆ. வணிகம் ஒன்றில் அக்கறை செலுத்தும் பிரிவினர் நால்வரைக் குறிப்பிடுக.

03) பொருள் உற்பத்தி வணிகத்தில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக.

04) கார்த்திக்கினால் சுகாதாரப் பாதுகாப்புடன் தயாரித்து பாடசாலை உணவகத்திற்கு வழங்கப்படுகின்ற சிற்றுண்டிகள் தொடர்பில் மாணவர், ஆசிரியர் கூடுதலான விருப்பத்தைக் காட்டுகின்றார்கள்.
(அ) இந்நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற பாடசாலை உணவகம் தொடர்பில் அக்கறை காட்டும் இரண்டு பிரிவினர்களைக் குறிப்பிடுக.
(ஆ) மேலே "அ" வில் நீங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவினரும் உணவகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணிகள் தலா ஒன்று வீதம் தருக.

05) வினோத் என்பவர் மரத்தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை நடாத்தி வருகின்றார்.
அ. வினோத் வணிகம் உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் எத்தகைய வணிகம் ஆகும்?
ஆ. தளபாட உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மரம் எவ்வகை உற்பத்திக் காரணியாகும்?

06) புறச்சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.
1) அரசினது நிலைப்புத்தன்மை
2) வருமானப் பரம்பல்
3) Nano தொழில்நுட்பம்
4) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்
5) Digital தொழில்நுட்பம்
6) வரவு செலவுத் திட்டக் கொள்கைகள்
7) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
8) சேமிப்புக்கள்

மேற்படி விடயங்களை கீழ்க் குறிப்பிடப்படும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.
(1) பொருளாதாரச் சூழல் (3) சட்டச் சூழல்
(2) அரசியல் சூழல் (4) தொழில்நுட்பச் சூழல்

07) பிரதான நகரின் பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் சந்திரன் என்பவர் மோர் மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட பானவகைகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்துகின்றார். அன்றாடம் பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் இவ்வணிகத்திற்கு வருகை தருகின்றனர்.
(அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.
(ஆ) எதிர்காலத்தில் இவ்வணிகத்திற்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.


kalvi.lk

08) கரன் என்பவர் நகரின் மத்தியில் தனது உதவியாளர் ஒருவரின் துணையுடன் மோர் மற்றும் இயற்கையான முறையில் (இரசாயனம் சேர்க்கப்படாத ) உற்பத்தி செய்யப்பட்ட இலைவகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சியினை விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

i. இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள கரன் வணிகத்தின் அகச்சூழலுக்குரிய இரண்டு தரப்பினரைக் குறிப்பிடுக.

ii. கரனின் வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ள, மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தரப்பினரைக் குறிப்பிட்டு, அத்தரப்பினர் இவ்வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணமொன்றை எழுதுக.

09) புதிய பஸ் பேரூந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் இயற்கையான உணவுகளை இரசாயன நஞ்சற்ற முறையில் தயாரிக்கும் உணவகம் ஒன்று காணப்படுகின்றமையால் அவ் உணவகத்துக்கு பெருந்தொகையான வாடிக்கையாளர் வருகை தருகின்றனர்.

அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.

ஆ) எதிர்காலத்தில் இவ் வணிகத்திற்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.

10) வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுக.

(10×4= 40 புள்ளிகள்)

## பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

i. வணிகமொன்றில் இடர்களை பொறுப்பேற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துபவர் முயற்சியாளர் ஆவார். (………..)

ii. தனது அறிவு, திறன் என்பவற்றை பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமங்களை சரியாக நிறைவேற்றுபவர் ஊழியர் ஆவார். (……….)

iii. உயிர் வாழ்வதற்கு தேவைகளை பூர்த்தி செய்வது அத்தியாவசியவசியமானதாகும். (………)

iv. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களால் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் நிலம் என அழைக்கப்படும். (………..)

v. தேவைகளானவை அத்தியாவசியமானவையாகவும் பொதுத்தன்மை கொண்டதாகவும் காணப்படும். (………)

vi. உள்ளகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிகமொன்றின் பலம், பலவீனங்களை அறிந்துகொள்ள முடியும். (……….)

vii. போட்டியாளர், வழங்குநர் என்போர் வணிகமொன்றின் உள்ளகச்சூழல் காரணிகளாகும். (……….)

viii. பணவீக்கம், வட்டிவீதம், நாணயமாற்றுவீதம் என்பன பொருளாதாரச் சூழலுக்குள் உள்ளடங்கும் விசைகளாகும்.

ix. உரிமையாளரின் நிதிப்பலம் குறைவாகவிருத்தல் வணிகமொன்றிற்கு அச்சுறுத்தலாகும். (………)

x. வணிகமொன்றினது பொருள் அல்லது சேவையொன்றிற்கு சமமான பொருள் அல்லது சேவையொன்றை வழங்குபவர்கள் போட்டியாளர்களாவார்.

(10×2= 20 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page